# GKR'S INSTITUTE

- DAILY CURRENT AFFAIRS
- WEEKLY CURRENT AFFAIRS
- MONTHLY MAGAZINE
- ONE LINER FOR CURRENT AFFAIRS
- TOPICWISE QUESTION
- MONTHLY QUESTION AND ANSWER

**12-11-2022**

**Wesite Link** : https://gkrsinstitute.com/

**Telegram Link** : https://t.me/gkrsInstitute

**Faceook Link** : https://www.facebook.com/தமிழில்-பயில்வோம்-UPSC-102987411064022/

## இந்திய செய்திகள்

### 1. இடஒதுக்கீடு உச்சவரம்பை 77%-ஆக உயர்த்த ஜார்க்கண்ட் பேரவையில் மசோதா நிறைவேற்றம்

- ஜார்க்கண்டில் முதல்வர் ஹேமந்த் சோரன் தலைமையில் ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா, காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளின் மகாக்கூட்டணி ஆட்சி நடைபெற்று வருகிறது.
- இங்கு மாநில அரசுப் பணிகளில் இடஒதுக்கீடு உச்சவரம்பு தற்போது 60 சதவீதமாக உள்ளது. இது, பொருளாதாரத்தில் பின்தங்கிய முற்பட்ட வகுப்பினருக்கான 10 சதவீத இட ஒதுக்கீட்டையும் உள்ளடக்கியதாகும்.
- இந்நிலையில், ஜார்க்கண்ட் சட்டப்பேரவையின் சிறப்புக்கூட்டம் நடைபெற்றது. இதில், இடஒதுக்கீடு உச்சவரம்பை 77 சதவீதமாக உயர்த்துவதற்கான ஜார்க்கண்ட் அரசு பணி காலியிடங்கள் மற்றும் பணிகள் திருத்த மசோதா-2022 நிறைவேற்றப் பட்டது.
- அரசமைப்புச்சட்டத்தின் 9-ஆவது அட்டவணையில் இந்த திருத்தச் சட்டம் இடம்பெற்ற பிறகு, இடஒதுக்கீடு அதிகரிப்பு அமலுக்கு வரும் என்று மசோதாவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த திருத்தச்சட்டத்தை 9-ஆவது அட்டவணையில் சேர்க்க மத்திய அரசுக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது.
- தற்போது நிறைவேற்றப்பட்ட மசோதாவின்படி, பழங்குடியினருக்கான இடஒதுக்கீடு 26-இல் இருந்து 28 சதவீதமாக உயரும்.
- தாழ்த்தப்பட்டோருக்கு தற்போதுள்ள 10 சதவீத இடஒதுக்கீடு 12 சதவீதமாக அதிகரிக்கப்படும்.மிகவும் பிற்படுத்தப்பட்டோர், இதர பிற்படுத்தப்பட்டவகுப்பினர் முறையே 15, 12 சதவீத இடஒதுக்கீடு பெறுவர்.

### 2. இந்தியா-அமெரிக்கா நிதி ஒத்துழைப்புக் குழு

- இந்தியா-அமெரிக்கா நிதி ஒத்துழைப்புக் குழுவின் ஆவது 9-கூட்டம் தில்லியில் நடைபெற்றது. அதில் கலந்து கொள்வதற்காக அமெரிக்க நிதியமைச்சர் ஜேனட் யெல்லன் இந்தியா வந்துள்ளார்.
- கூட்டத்துக்குப் பிறகு வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில், பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான நிதியைத் திரட்டுவது தொடர்பாகக் கூட்டத்தின்போது விவாதிக்கப்பட்டது.
- பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ள 2025-ஆம் ஆண்டு வரை ஆண்டுக்கு சுமார் ரூ.8 லட்சம் கோடியைத் திரட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- அந்த நிதியைக் கொண்டு வளர்ந்து வரும் நாடுகளுக்கு உதவவும் உறுதி ஏற்கப்பட்டுள்ளது.

### 3. சென்னை- மைசூரு வந்தே பாரத் விரைவு ரயில் சேவை

- சென்னை-மைசூரு இடையிலான தென்னிந்தியாவின் முதல் வந்தே பாரத் விரைவு ரயில் சேவையை பிரதமர் நரேந்திர மோடி பெங்களூரில் தொடக்கி வைத்தார்.
- பிரதமர் மோடி, கிராந்தி வீரசங்கொல்லி ராயண்ணா ரயில் நிலையத்தில் சென்னை - மைசூரு வந்தே பாரத் ரயில் சேவையைத் தொடக்கிவைத்தார்.
- இந்திய அளவில் தொடங்கப்படும் 5-ஆவது வந்தே பாரத் விரைவு ரயில் சேவை இதுவாகும்.
- இந்தியாவின் **முதல் வந்தே பாரத் விரைவு ரயில் சேவை 2019**-ஆம் ஆண்டில் புதுதில்லி, கான்பூர்,அலாகாபாத்,வாராணசி இடையே இயக்கப்பட்டது.
- வந்தே பாரத் விரைவு ரயில் முழுக்க முழுக்க உள்நாட்டு தொழில்நுட்பத்தின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளது.
- மேலும், ரயில்களுக்கு இடையிலான மோதலைத்தவிர்க்கும் தொழில்நுட்பமும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த ரயில் 52 விநாடி பூஜ்யத்தில் இருந்து மணிக்கு களில் 100 கி.மீ. வேகத்தில் பயணிக்கும். அதிகபட்சமாக மணிக்கு 180 கி.மீ. வேகத்தில் செல்லும் திறன் கொண்டதாகும்.
- **காசி தரிசனம் திட்டம்**:
  - ✓ இதனிடையே, இந்திய ரயில்வே துறையின் **பாரத் கௌரவ் ரயில்** கொள்கையின்படி, கர்நாடக ஹிந்து அறநிலையத்துறை சார்பில் இயக்கப்படும் '**பாரத் கௌரவ் காசி தரிசனம்**' ரயில் சேவையை பிரதமர் மோடி தொடக்கி வைத்தார். காசி யாத்திரையை 8 நாள்களுக்கு மேற்கொள்ள சலுகைக் கட்டணத்தில் இந்த ரயில் இயக்கப்படுகிறது.
  - ✓ காசி யாத்திரை மேற்கொள்ளும் பக்தர்களுக்கு கர்நாடக அரசு தலா ரூ. 5 ஆயிரம் உதவித்தொகை வழங்குகிறது.

### 4. 108 அடி உயர கெம்பே கௌடா சிலை திறப்பு

- பிரதமர் மோடி, தேவனஹள்ளியில் உள்ள கெம்பே கௌடா பன்னாட்டு விமான நிலைய வளா கத்தில் 108 அடி உயரத்தில் அமைக்கப்பட்டுள்ள கெம்பே கௌடாவின் வெண்கலச் சிலை, பூங்காவை திறந்து வைத்தார்.
- 'வளமையின் சிலை' என்று அழைக்கப்படும் கெம்பே கௌடா சிலையின் எடை 218 டன்னாகும். இந்தச் சிலையானது 98 டன் வெண்கலம், 120 டன் எஃகு உலோகங்களால் செய்யப்பட்டுள்ளது.
- கெம்பே கௌடாவின் வாள் 4 டன் எடை கொண்டாகும்.
- இந்தச் சிலையை சுற்றி 23 ஏக்கர் நிலத்தில் ரூ.84 கோடியில் கெம்பே கௌடா பூங்கா அமைக்கப்பட்டுள்ளது.
- **2-ஆவது முனையம்**:

- ✓ முன்னதாக, பெங்களூரு, தேவனஹள்ளியில் அமைந்துள்ள கெம்பெ கௌடா பன்னாட்டு விமான நிலையத்தில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள 2-ஆவது முனையத்தை பிரதமர் மோடி திறந்து வைத்தார்.
- ✓ ரூ. 5 ஆயிரம் கோடியில் உருவாக்கப்பட்டுள்ள **'சுற்றுச்சூழல் தோழமை முனையம்'** முழுக்க முழுக்க மூங்கில்களால் அமைக்கப்பட்டுள்ளது.
- ✓ புதிய முனையத்துக்கு 'பூங்காவில் ஒரு முனையம்' என பெயரிடப்பட்டுள்ளது.
- ✓ இந்த முனையத்தில் அமைக்கப்பட்டுள்ள தொங்கும் தோட்டங்கள் அதிசயமாகப் பார்க்கப்படுகிறது.

- ❖ விமான நிலையத்துக்கு நுழைவதற்கு முன், 10 ஆயிரம் சதுரமீட்டரில் அமைக்கப்பட்டுள்ள பசுமை சுவர்களைக் கடந்து செல்லும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

## உலக செய்திகள்

### 1. உச்ச அளவில் சர்வதேச கரியமில வாயு வெளியேற்றம்

- ❖ சர்வதேச அளவிலான கரியமில வாயு வெளியேற்றம் நடப்பு 2022-ஆம் ஆண்டில் **4,060 டன்** என்ற அளவைத் தொடும் என ஐ.நா. ஆய்வறிக்கையில் எச்சரிக்கப்பட்டுள்ளது.
- ❖ இது கடந்த 2019- ஆம் ஆண்டில் பதிவான 4,090 டன் என்ற உச்ச அளவைவிட சற்றே குறைவாகும்.
- ❖ ஐ.நா. 27-ஆவது பருவநிலை மாநாடு எகிப்தில் நடைபெற்று வரும் நிலையில், 'சர்வதேச கார்பன் பட்ஜெட்' என்ற ஆய்வறிக்கையின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.
- ❖ அந்த அறிக்கையில், 'நடப்பாண்டில் சர்வதேச கரியமில வாயு வெளியேற்றம் 4,060 டன்னாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.
- ❖ இதே அளவில் கரியமில வாயு வெளியேற்றம் தொடர்ந்தால், பூமியின் வெப்பநிலையானது தொழில்புரட்சிக்கு முந்தைய அளவை விட 1.5 டிகிரி செல்சியஸ் அளவை இன்னும் 9 ஆண்டுகளில் எட்டிவிட 50 சதவீத வாய்ப் புள்ளது.
- ❖ கடந்த 2021-ஆம் ஆண்டில் சர்வதேச கரியமில வாயு வெளியேற்றத்தில் **சீனா (31 சதவீதம்), அமெரிக்கா ( 14 சதவீதம்), ஐரோப்பிய யூனியன் ( 8 சதவீதம்)** ஆகியவை முன்னிலையில் உள்ளன.
- ❖ இந்தியா 7 சதவீத கரியமில வாயுவை வெளியேற்றியது. நடப்பாண்டில் கரியமில வாயு வெளியேற்றம் சீனாவில் 0.9 சதவீதமும், ஐரோப்பிய யூனியனில் 0.8 சதவீதமும் குறையும் எனக்கணிக்கப்பட்டுள்ளது.

- ஆனால், அமெரிக்காவில் 1.5 சதவீதமும், இந்தியாவில் 6 சதவீதமும், சர்வதேச அளவில் 1.7 சதவீதமும் அதிகரிக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

## பொருளாதார செய்திகள்

### 1. இந்திய பொருளாதார வளர்ச்சி 7 -ஆக குறையும்

- இந்தியாவின் பொருளாதாரம் நடப்பாண்டில் 7 சதவீதம் மட்டுமே வளர்ச்சி காணும் என மூடிஸ் மதிப்பாய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.
- சர்வதேச சூழல் காரணமாக, 7.7 சதவீதம் என்ற முந்தைய கணிப்பை அந் நிறுவனம் தற்போது குறைத்துள்ளது.
- இது தொடர்பாக அந்நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், 2022-ஆம் ஆண்டுக்கான இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி ( ஜிடிபி) வளர்ச்சி கணிப்பு 7.7 சதவீதத்தில் இருந்து 7 சதவீதமாகக் குறைக்கப்படுகிறது.
- கடந்த 2021-ஆம் ஆண்டில் இந்தியப் பொருளாதாரம் 8.5 சதவீதம் வளர்ச்சி கண்டது. 2023-ஆம் ஆண்டில் பொருளாதார வளர்ச்சி 4.8 சதவீதமாகவும், 2024-ஆம் ஆண்டில் 6.4 சதவீதமாகவும் இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.
- பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தவும் அந்நியச்செலாவணி கையிருப்பை அதிகரிக்கவும் இந்திய ரிசர்வ் வங்கியானது ( ஆர்பிஐ) வட்டி விகிதங்களை மேலும் 0.5 சதவீதம் அதிகரிக்க வாய்ப்புள்ளது.
- இந்தியப் பொருளாதார வளர்ச்சி கணிப்பை **உலக வங்கி 7.5 சதவீதத்தில் இருந்து 6.5 சதவீதமாகவும், சர்வதேச நிதியம் ( ஐஎம்எஃப்) 7.4 சதவீதத்தில் இருந்து 6.8 சதவீதமாகவும், ஆசிய வளர்ச்சி வங்கி 7.5 சதவீதத்தில் இருந்து 7 சதவீதமாகவும் குறைத்துள்ளது** குறிப்பிடத்தக்கது.